**March – 2008** Reg. No. ...................................... **G-3008**

**Name :** ......................................

Part-II

# TAMIL

Maximum : 80 Scores

Time : $2\frac{1}{2}$ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to candidates :***

- There is a 'cool-off time' of 15 minutes in addition to the writing time of 2 ½ hrs,
- You are not allowed to write your answers nor to discuss anything with others during the 'cool-off time'.
- Use the 'cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub-questions must be answered from the same question itself.

**നിർദ്ദേശങ്ങൾ** :

- നിർദ്ദിഷ്ട സമയത്തിന് പുറമെ 15 മിനിറ്റ് 'കൂൾ ഓഫ് ടൈം' ഉണ്ടായിരിക്കും. ഈ സമയത്ത് ചോദ്യങ്ങൾക്ക് ഉത്തരം എഴുതാനോ, മറ്റുള്ളവരുമായി ആശയ വിനിമയം നടത്താനോ പാടില്ല.
- ഉത്തരങ്ങൾ എഴുതുന്നതിന് മുമ്പ് ചോദ്യങ്ങൾ ശ്രദ്ധാപൂർവ്വം വായിക്കണം.
- എല്ലാ ചോദ്യങ്ങൾക്കും ഉത്തരം എഴുതണം.
- ഒരു ചോദ്യനമ്പർ ഉത്തരമെഴുതാൻ തെരഞ്ഞെടുത്തു കഴിഞ്ഞാൽ ഉപചോദ്യങ്ങളും അതേ ചോദ്യ നമ്പരിൽ നിന്ന് തന്നെ തെരഞ്ഞെടുക്കേണ്ടതാണ്.

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுடனும் தொடர்புடையக் குறிப்புரைகளைப் படித்துப் புரிந்து கொண்ட பின்னரே விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுக்குமுரிய மதிப்பெண் அந்தந்த வினாவுக்கு நேர் எதிரே கொடுக்கப்பட்டுள்ளது.*

1. "மலையைப் பார்க்கிறேன்
சிலைக்காகும்
கோயிலுக்காகும்
பங்களாவின்
சுற்றுச் சுவர்க்காகும்
தாரோடும் வீதிக்கு
செல்லிக் கல்லாகும்
ஏதேதோ தெரிந்தாலும்
மலையாகப் பார்க்கத் தெரியவில்லை"

இப் பாடற்பகுதியின் உட்பொருளைக் கண்டறிந்து, இன்றைய சமூக வாழ்க்கையுடன் தொடர்புப்படுத்திக் கருத்தரங்க உரைக் குறிப்பு ஒன்று தயாரிக்க. 8

2. சீதையும் கண்ணகியும் சந்தித்தால் அவர்கள் என்னென்ன பேசிக் கொள்வார்கள்? பொருத்தமான தலைப்புடன் ஒருபக்க அளவில் உரையாடல் அமைக்க. 6

3. விழிஞத்தை உலகளாவிய ஒரு துறைமுகமாக மாற்ற வேண்டும் என்பது கேரள மக்களின் நீண்டகால ஆசை. இது குறித்து நடைபெறவிருக்கும் 'மக்கள் மன்றத்தில்' நீங்களும் உரையாற்றப் போகின்றீர்கள். விழிஞத்தின் அருமை பெருமைகளைச் சுட்டிக்காட்டி சொற்பொழிவு தயாரிக்க. 8

4. 'பாட்டையா' போன்ற ஒரு கதாபாத்திரத்தை நீங்களும் சந்தித்திருக்கலாம். அந்த அனுபவம் பற்றிய சுவையான குறிப்பு ஒன்றைப் பள்ளி இதழுக்காக எழுதுங்கள். 6

5. அசோகமித்திரனின் 'மழை' என்ற கதையைப் படித்திருப்பீர்கள். அதன் மையக்கருத்தை எடுத்துரைத்து, அக்கதைக்குப் பொருத்தமான இன்னொரு தலைப்பைக் கூறுக. 2

6. கீழ்வரும் நாட்டுப்புறப் பாடலை வாசித்து, நாட்டுப்புறப் பாடல்களின் பண்பு குறித்து எழுதுக. இப்பாடலில் இடம் பெற்றிருக்கும் பேச்சு வழக்குச் சொற்களை எடுத்தெழுதி அவற்றின் சரியான வடிவங்களைத் தருக.

"பணத்தைக் கொடுத்தோமுன்னு
பதறாதீக அத்தானே – ஒங்க
பணமெல்லாங் கூடிப் – பொன்னாள்
பல்லுவெல யாகாது

துட்டக் கொடுத்தோமின்னு
தொயராதீக அத்தானே – ஒங்க
துட்டெல்லாங் கூட – எங்க
தூணுவெல யாகாது

காசு கொடுத்தோமுன்னு
கதறாதீக அத்தானே – ஒங்க
காசெல்லாங்கூடி – எங்க
கதவுவெல யாகாது" 6

7. இரண்டாயிரம் ஆண்டு இடைவெளியில் எழுதப்பட்ட இரண்டு பாடற்பகுதிகள் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒப்பிட்டு 'மனிதநேய' அடிப்படையில் விமர்சனக் குறிப்பு வரைக.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறநானூறு)

"கண்ணில்லாதவர்கள்
கையேந்துகிற போது
நாமெல்லாம் குருடர்கள்" (ஹைகூ கவிதை) 6

8. 'ஆமைச் சமூகமும் ஊமை முயலும்', 'தலைப் பெருநாள்' என்னும் சிறுகதைகளை மையமாக் கொண்டு 'இன்றைய சமூகத்தில் பெண்களின் நிலை' என்ற தலைப்பில் மங்கையர் மலருக்காக ஒரு கட்டுரை தயாரிக்க. 8

9. உங்கள் பள்ளி அறிவியல் மன்றத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் 'இணைய தளமும் இளைய தலைமுறையும்' என்ற தலைப்பில் நீங்கள் கட்டுரை படிக்க வேண்டும். அதற்கான குறிப்புக்கள் தயாரிக்க. 6

10. நாவல்களிலும் சிறு கதைகளிலும் கையாளப்படும் மொழிநடை செந்தமிழ் நடையாக இருப்பது நல்லதா ? பேச்சுமொழி நடையாக இருப்பது நல்லதா ? என்பது பற்றிய பட்டிமன்றத்தில் நீங்களும் கலந்து கொள்வதாக இருந்தால் எந்த அணிக்காக வாதாடுவீர்கள். உங்கள் வாதத்திற்கான கருத்துக்களை வரிசைப்படுத்துக. 6

11. 'படித்ததும் சுவைத்ததும்' என்ற வானொலி நிகழ்ச்சிக்காகக் கீழ்வரும் பாடலைப் படித்து ரசனைக் குறிப்பு தயாரிக்க.

பொன்னொளியும் மரகதத்தின் பொலிவும் செந்நெற்
புலங்காட்ட, அதன் மீது நிழலை வீசும்
பன்னரிய சரத்கால மேகந் தன்னைப்
பரிதிவிரைந்து எழுந்தோடி வெருட்டிச் செல்ல
தன்னைமறந்து ஒளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்ந் தேன்மறந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியும் மாதோ

(சரத்காலம்) 6

12. அதிக வாசிப்பை ஊக்கப்படுத்தும் பொருட்டு கேரள அரசு ஆண்டு தோறும் ஒரு வார காலத்தை 'வாசிப்பு வாரமாக'க் கொண்டாடி வருகின்றது. இவ் வாரத்தின் நோக்கத்தை வலியுறுத்தும் மூன்று முத்திரை வாக்கியங்கள் எழுதுக. **3**

13. "பொறியியல், மருத்துவம் போன்ற படிப்புக்கு நுழைவுத்தேர்வு வேண்டுமா ? வேண்டாமா ? என்பது குறித்தான கருத்துக் கணிப்பை நடத்த உள்ளோம். வாசகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்." இது ஒரு தினப்பத்திரிகையில் வெளியான செய்தி. உங்கள் கருத்தை 'தினச் செய்தி' ஆசிரியருக்கு வாசகர் கடிதமாக எழுதுங்கள். **3**

14. கீழ்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்துப் பொருத்தமான தலைப்பிடுக.

"ஏகதின கிரிக்கெட்டில் 42 ஆம் செஞ்சுரி டெண்டுல்க்கரில் நிந்நு ஒரிக்கல் கூடி வழுதிப்போயி. மொகாலியில் நடந்த ரண்டாம் ஏகதினத்தில் அத்தேகம் 99 ரண்ஸினு புறத்தாயி. ஈ வர்ஷம் மூந்நாம் தவணயாணு சச்சின் 99 ல் புறத்தாகுந்நது. ஆகெ பதினஞ்சு தவண 90 னும் 100 னும் இடைக்கு சச்சின் புறத்தாயிட்டுண்டு. இதும் அத்தேகத்தினு ஒரு ரிக்கார்டு தந்நெ." **6**